# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF THE SUBORDINATE COURT, AVINASHI

# O.S.No. 226/2021

# P W - 1

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாலுசாமி | **Caste** | : |
| **Husdand Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 27/2023 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th day of November 2023**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. க.ச.எண்.685 உட்பிரிவு 2 – ல் ஜோதி மணி மற்றும் தங்கமணி ஆகியோருக்கு 70 செண்ட் தான் பாத்தியம் ஆனால், 75 செண்ட் அவர்களுக்கு பாத்தியப்பட்டதாக ஆவணம் எழுதியுள்ளார்கள் மற்றும் 685 உட்பிரிவு 9 ல் 6 1/2 செண்ட் அவர்களுக்கு அதிகமாக பாத்தியப்பட்டதாக ஆவணம் எழுதியுள்ளார்கள் அது தவறு. அதற்காக தான் வழக்கு போட்டுள்ளேன். எந்தெந்த காலை எண்களில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் க.ச.எண்.685 (2) மற்றும் (9) ஆகிய காலைகளை குறிப்பிட்டு வழக்கு போட்டுள்ளேன். 1ம்பிரதிவாதி என்னுடைய தாயார். அவர் 1969 ம் ஆண்டு அம்மாசையக்காள் அவர்களிடமிருந்து கிரயம் பெற்றார். என் தாயார் விற்பனை செய்தவர்களுக்கு 1934 ம் ஆண்டு பாக சாஸ்தனத்தின் படி பாத்தியம் என்று சொன்னால் சரிதான். மேற்படி Ex.A12 ஆவணத்தில் சின்னே கவுண்டர் மக்கள் நஞ்சப்ப கவுண்டர், சின்னியகவுண்டர் மற்றும் ஒரு மூன்று நபர்கள் பாக பிரிவினை செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். அ ந்த பாக பிரிவினை ஆவணத்தில் பி பாக சொத்தாக சின்னிய கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

2. மேற்படி சின்னிய கவுண்டரின் மக்கள் தான் ராமசாமி மற்றும் மற்றொரு சின்னிய கவுண்டர் என்று சொன்னால் சரிதான், மேற்படி Ex.A12 ஆவணத்தின் படி பி பாக சொத்தாக சின்னே கவுண்டர் மகன் சின்னிய கவுண்டருக்கு 685 காலையில் கிணற்றுக்கு போகிற தடத்திற்கு தெற்கு, செல்லப்ப கவுண்டர் வகையரா பங்கிற்கு மேற்கு, 683 காலைக்கு வடக்கு, செங்காளியப்ப கவுண்டர் பங்குக்கு கிழக்கு, இதன் மத்தியில் 13 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி 13 செண்ட் குறித்து சின்னிய

K SURESH KUMAR Digitally signed by K SURESH KUMAR Date: 2023.11.28 17:37:18 +0530

கவுண்டர் ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். மேற்படி 13 செண்ட் ராமசாமிக்கும், சின்னிய கவுண்டருக்கும் பாத்தியம் என்று சொன்னால் சரிதான். மேற்படி சின்னே கவுண்டர் மகன் ராமசாமியின் மனைவி அம்மாசையக்காளிடமிருந்து என் தாயார் Ex.A1ன் படி 21.05.1969 ல் 75 செண்ட் பொதுவில் கிரயம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். அதுபோக கிணற்றிலும் பாகம் கிரயம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். வேறு சொத்துக்கள் Ex.A1 மூலமாக கிரயம் பெறப்படவில்லை.

3. நான் தாவாவில் வாய்மொழியாக பாகம் பிரித்தாக சொல்லியிருக்கிறேன். ஆனால், எந்த தேதியில் யார் யார் முன்னிலையில் பாகம் பிரித்தேன் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். உட் பிரிவு நில உடமை மேம்பாட்டு திட்டத்தில் ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். அரசங்கத்தில் இருந்து மேற்படி நில உரிமையாளர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி Ex.A12 ஆவணத்தில் கண்டுள்ள 13 செண்ட் பூமியில் 6 1/2 செண்ட் சின்னிய கவுண்டர் மகன் சின்னிய கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. மீதம் உள்ள 6 1/2 செண்ட் சின்னிய கவுண்டர் மகன் ராமசாமிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சின்னிய கவுண்டர் எனக்கு 6 1/2 செண்ட் குறித்து ஆவணம் எதுவும் எழுதி கொடுத்துள்ளாரா என்றால் 1969 பத்திரத்தில் அந்த 13 செண்டும் எங்களுக்கு சேர்த்து கிரயம் கொடுத்துள்ளார்கள்.

4. Ex.A12 ஆவணத்தில் நான்குபுற எல்லைகள் குறிப்பிட்டு தான் 13 செண்ட் பூமி கண்டு எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி 13 செண்ட் பொருத்து என் தாயார் எந்த கிரயமும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் கிரயம் பெறும் போது பொதுவில் கிரயம் பெற்றதால் அந்த 13 செண்ட் அந்த கிரயத்திற்கு கட்டுபடாது என்று சொன்னால் சரியல்ல.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.11.28 17:21:23 +0530

Subordinate Judge,
Avinashi.